1979 நவம்பர் 10]

(12) சென்னையில் குடிநீர்க் குழாயில் கழிவுநீர் கலந்து விடுவது குறித்து.

திரு. தீ. சு. நல்லதம்பி : தலைவரவர்களே,

''சென்னை நகரில் 63-வது வட்டத்தில் குடிநீர் குழாய்களில் கழிவுநீர் கலந்துவிடுவதால் அதனை தடுக்க வேண்டியது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம்வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, விவர அறிக்கை, அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மூன்று தெருக்கள் அதவாது (1) நாராயண மேஸ்திரி தெரு, (2) செல்லப்ப முதலி தெரு, (3) அனுமந்தராயன் கோயில் தெரு இவை மூன்றும் ஒன்றிலிருந்து ஒன்று பிரியும் தெருக்கள். இந்தத் தெருக்களில் சில வீடுகளில் குடிநீர் குழாயுடன் அழுக்கு நீரும் கலந்து வருகின்றது என்ற முறையீடு வந்தவுடன் அந்தத் தெருக்கள் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரிய அதிகாரிகளால் பார்வையிடப்பட்டன. பொதுவாக, இம்மாதிரி நிலைமை வீட்டு இணைப்புக் குழாய்கள் துருப்பிடித்து, ஓட்டை விழுந்து, சுற்றியுள்ள கழிவுநீர் உள்ளே செல்வதால் நேரும். இந்த நிலைமை பரவாமல் இருப்பதற்கு தெருக்குழாய்கள் துண்டிக்கப்பட்டு ஒவ்வொரு வீட்டு இணைப்புக் குழாயையும் தோண்டி பரிசோதித்து, பழுது அடைந்த இணைப்புகளை கண்டுபிடிக்கும் வேலை நடந்து கொண்டு வருகின்றது. நிலைமை சீரடையும்வரை வேலை தொடர்ந்து நடக்கும். இடைக்காலத்தில் தெருவாசிகளுக்கு சுத்தமான குடிநீர் கிடைக்கும் பொருட்டு இரும்புத் தொட்டிகள் வைத்து லாரி மூலம் குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்னும் சில நாட்களில் நிலைமை சரியாகி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. தீ. சு. நல்லதம்பி : தலைவரவர்களே, இன்றைய தினம் இந்த அறிக்கையில் அப்படி குடிநீரிலே கழிவுநீர் கலந்து இருப்பதை ஒத்துக்கொண்டு விரைவிலே அது போக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நான் தங்களுக்கு கடந்த மாதம் 31-ந் தேதி இதனைப் பற்றிய அறிவிப்பைக் கொடுத்திருந்தேன். ஆனால், எனக்குத் தெரிந்தது, ஏறக்குறைய 20 நாட்களுக்கு

முன்பு. ஆக, இப்படி ஒரு மாதகாலம் குடிநீரிலே கழிவு நீர் கலந்து, சென்னையில் வாழும் மக்கள் அடிக்கடி பல நோய்களுக்கும், தொல்லைகளுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள் என்று இங்கே அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும், அமைச்சரவர்களால் அறிவிக்கப்படுகிறது. விரைவிலே இன்னும் சில நாட்களிலே இது போக்கப்படும் என்று, இது எப்படிப்பட்ட காரியம்? இதற்கு முன்புகூட சில நேரங்களில் இப்படி நடப்பது உண்டு. ஆனால், போர்க்கால நடவடிக்கைகள் மாதிரி, ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களிலே அது தீர்க்கப்பட்டிருக்கிறது என்பது நாங்கள் அனுபவத்திலே கண்டது. ஆனால், இன்றைக்கு இந்த வாரியத்தினுடைய திறமை எந்த அளவுக்கு இருக்கிறது என்றால், ஆமை வேகமாகச் செயல்படுகிறது. பொது மக்கள் பிரதிநிதிகள் இல்லாதநிலையில், இதை அமைச்சரவர்கள் சற்று கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி குடிநீரிலே கழிவு நீர் கலப்பதைக் கண்டு பிடித்த அதிகாரிகள், அந்த பைப்புகள் பழுதடைந்து இருந்தால், அந்த வீட்டுக்குச் சொந்தக்காரரே அந்த பைப்புகளை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். வீட்டுக்குள்ளே கெட்டுவிட்டால், வீட்டுச் சொந்தக்காரர் வாங்கிக் கொடுக்கலாம். ஆனால், அந்த ரோடு பகுதியில் அந்த பைப் கெட்டு விட்டால், அதை வாரியமே செலவு செய்து வாங்குவதுதான் முறை. அந்த முறையை மாற்றி, இப்படி வேண்டுமென்றே பொதுமக்களுக்குத் தொல்லைதரும் ஸ்தாபனமாக, ஆமை வேகத்தில் செயல்புரியும் ஒரு ஸ்தாபனமாக வாரியம் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(விடை இல்லை.)

(13) அரிசன மாணவிகளுக்கு தங்கும் விடுதி இல்லாதது குறித்து.

திரு. வ. துலுக்காணம் : தலைவரவர்களே,

" விருத்தாசலம் வட்டம், சேப்பாக்கம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் ஏழை அரிசன மாணவிகளுக்கு தங்கும் விடுதி இல்லாததால் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு.பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே அவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS